**பொன் வித்யாஷ்ரம் வளசரவாக்கம்**

**பத்தாம் வகுப்பு - பயிற்சித் தாள்**

**முதல் பருவத்தேர்வு - (P.T) 1) 2017 - 18**

**தமிழ் - இரண்டாம் மொழி**

**இலக்கணம், செய்யுள், உரைநடை, துணைப்பாடம், பொது இலக்கண வினாக்கள் (MCQ)**

**அ) நிரப்புக**

1. சமையல் - இச்சொல்லில் ஐகாரம் ________ மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.
   அ) ஒரு மாத்திரை   ஆ) இரண்டு மாத்திரை
   இ) அரை மாத்திரை   ஈ) ஒன்றரை மாத்திரை
2. ஔகாரக் குறுக்கம் __________ மட்டுமே குறைந்து ஒலிக்கும்.
   அ) முதலில்   ஆ) இடையில்
   இ) கடையில்   ஈ) மூவிடங்களிலும்
3. முதலெழுத்துகள் மொத்தம் ____________.
   அ) இருபது   ஆ) முப்பது
   இ) இருநூற்றுப் பதினாறு   ஈ) பதினெட்டு
4. போலும், மருளும் ஆகிய மகரஈற்றுச் சொற்களில் ஈற்றயல் ___________கெடும்.
   அ) அகரம்   ஆ) மகரம்
   இ) உகரம்   ஈ) தகரம்
5. ______________ மூவிடங்களிலும் குறுகும்.
   அ) ஔகாரம்   ஆ) ஐ காரம்
   இ) மகரம்   ஈ) ஆய்தம்
6. மகர ஆய்தக் குறுக்கங்கள் ________ மாத்திரை பெறும்
   அ) அரை   ஆ) கால்
   இ) முக்கால்   ஈ) ஒரு
7. பல் + தீது என்பது ___________ எனப் புணரும்
   1. பல்தீது   2. பஃறீது
   3. பலதீது   4. பலித்தீது
8. தனிக்குறிலை அடுத்துவரும் லகர ளகரங்கள் வருமொழியில் தகரத்தோடு சேரும் போது ________ திரியும்
   அ) வகரமாக   ஆ) தகரமாக
   இ) ஆய்தமாக   ஈ) றகரமாக

9. குறுக்கங்கள் __________ வகைப்படும்.

அ) மூன்று ஆ) நான்கு

இ) ஏழு ஈ) ஆறு

10. வரும் + வண்டி (கூறியவாறு செய்க)

அ) வருவண்டி ஆ)வாராவண்டி

இ) வரும்வண்டி ஈ) வரவண்டி

11. உதாரணம் கொடு ஆய்தக் குறுக்கம்

அ) ப..றீது ஆ) அ..றிணை

இ) ப..றுளி ஈ) யாவும் சரி

12. சரியான சொற்றொடரைத் தெரிவு செய்க

அ) ஔகாரம் மொழி முதலில் மட்டுமே குறுகும்

ஆ) ஔகாரம் மொழி இடையில் மட்டுமே குறுகும்

இ) ஔகாரம் மொழி கடையில் மட்டுமே குறுகும்

ஈ) ஔகாரம் மூவிடங்களிலும் குறுகும்.

## செய்யுள் திறனறி வினா

" இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பல கழித்தோம் குறைகளைந்தோமில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

1. இப்பாடலின் தலைப்பு ஆசிரியர் யார்?
2. எவ்விடத்தும் எவை வேண்டும்?
3. தலை முறைகளை எவ்வாறு கழித்தோம்?
4. வாரீர் என ஆசிரியர் அழைப்பது எதற்காக?
5. பாவேந்தரின் படைப்புகள் நாங்கினை எழுதுக.
6. பாவேந்தரின் இயற்பெயர் யாது?

## இலக்கணம் சொல்

1. பதம், மொழி, கிளவி, வார்த்தை இவை குறிப்பது எவற்றை?

அ) வாக்கியம் ஆ) தொடர்

இ) சொல் ஈ) யாவும் சரி

2. மொழி __________ வகைப்படும்

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஆறு

3. <u>உதாரணம் கொடு</u> ஒரெழுத்தொருமொழி

அ) இரண்டு ஆ) சொல்

இ) கண் ஈ) வா

4. <u>இலக்கணக் குறிப்பு தருக: மண்</u>

அ) ஒரெழுத்து ஒருமொழி ஆ) தனி மொழி

இ) தொடர்மொழி ஈ) பொது மொழி

5. " கடையில் நின்றான் " என்பது _________

அ) தனிமொழி ஆ) தொடர் மொழி

இ) பொதுமொழி ஈ) மூன்றும் தவறு

6. 'வைகை' என்பது

அ) ஒரெழுத்தொருமொழி ஆ) பதம்

இ) மொழி ஈ) பொதுமொழி

7. எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிப்பது ___________

அ) பெயர்ச் சொல் ஆ) வினைச் சொல்

இ) இடைச் சொல் ஈ) உரிச் சொல்

8. தன் பொருளில் முற்றுப் பெற்று வந்துள்ள வினைச் சொற்களை __________ என்பது வழக்கம்.

அ) வினைச் சொல் ஆ) வினையாலணையும் பெயர்

இ)வினை முற்று ஈ) யாவும் சரி

9. முற்றுவினை என்பது

அ) பெயர்ச் சொல் ஆ)வினைச் சொல்

இ) வினைமுற்று ஈ) யாவும் தவறு

10. வினைமுற்று _____________க்குப் பயனிலையாய் அமையும்

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்

இ)வினையெச்சம் ஈ) வினைமுற்று

11. வினைமுற்று தெரிநிலை, ___________ என இரண்டாகும்

அ) வினை ஆ) வினையெச்சம்

இ) பெயரெச்சம் ஈ) குறிப்பு

12. தெரிநிலை வினைமுற்று ___________ வெளிப்படையாகக் காட்டும்

அ) இடைனிலையை ஆ) பயனிலையை

இ) காலத்தை ஈ) விகுதியை

13. 'அவன் விழுப்புரத்தான்' - இலக்கணக் குறிப்பு தருக

அ) தெரினிலை வினை ஆ) உடன்பாட்டுவினை

இ) குறிப்பு வினை ஈ) எதிர்மறை வினை

14. வினைமுற்றின் விகுதி குறைந்து நிற்கும் சொல் ______________ ஆகும்
அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்
இ) எச்சவினை ஈ) முற்றுவினை

15. இலக். குறிப்பு தருக : படித்த மாணவர்
அ) பெயர்ச்சொல் ஆ) பெயரெச்சம்
இ) வினையெச்சம் ஈ) வினைமுற்று

16. உண்ணாத கயல்விழி - இலக்கணக் குறிப்பு தருக
அ) உடன்பாட்டு பெயரெச்சம் ஆ) எதிர்மறை பெயரெச்சம்
இ) உடன்பாட்டு வினையெச்சம் ஈ) எதிர்மறை வினையெச்சம்

17. முற்றுப்பெறாத வினைச்சொல் வேறொரு வினை முற்றைக் கொண்டு முடிவது ____________ ஆகும்.
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
இ) வினைமுற்று ஈ) யாவுமே தவறு

18. உதாரணம் கொடு தெரிநிலை வினையெச்சம்
அ) படித்து முடித்தாள் ஆ) பழுத்த பழம்
இ) முதலாவது சரி ஈ) இரண்டாவது சரி

19. தொழிலைக் குறிக்கும் சொல் _____________
அ) வினைச்சொல் ஆ) வினைமுற்று
இ) குறிப்புவினை ஈ) தொழிற்பெயர்

20. முருகன் வந்தனன் உண்டனன்
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
இ) முற்றெச்சம் ஈ) யாவும் தவறு

21. ஒரு வினைமுற்றுச் சொல் எச்சப்பொருளில் வந்து வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது _________ எனப்படும்.
அ) பெயரெச்சம் ஆ) உடன்பாட்டுப் பெயரெச்சம்
இ) முற்றெச்சம் ஈ) குறிப்பு முற்றெச்சம்

## செய்யுள் பகுதி

1. மாணிக்க வாசகர் - ஆசிரியர் குறிப்பு தருக.
2. திருவாசகம் - நூற் குறிப்பு தருக.
3. மாணிக்கவாசகர், இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார்?
4. திருக்குறள் - நூற்குறிப்பு, திருவள்ளுவர் ஆசிரியர் குறிப்பு தருக.
5. ஒழுக்கத்தின் உயர்வினை எழுதுக
6. ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மையையும் கடைப்பிடிக்காதவழி ஏற்படும் தீமையையும் எழுதுக
7. காலமறிதலின் தேவையை எழுதுக
8. காலமறிந்து செயல்படுவதால் வரும் பயன் யாது?

9. ஒழுக்க முடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக (நெடுவினா)
10. காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக
11. ஏலாதி - நூற்குறிப்பு எழுதுக
12. கணிமேதாவியார் - குறிப்பு எழுதுக
13. பழியில்லா மன்னரின் சிறப்புகளை கணிமேதாவியார் வழிநின்று விளக்குக.
14. வாயிலோன் பாண்டியனை வாழ்த்தியமையை எழுதுக.
15. கண்ணகி குறித்து வாயிலோன் கூறியவை யாவை?
16. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?
17. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய ம்றுமொழி யாது? நெடுவினா:
18. "தேரா மன்னா" என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?
19. பாவேந்தர் - ஆசிரியர் குறிப்பு தருக
20. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாவேந்தர் கூறுவன யாவை?
21. தமிழ் மொழி வளர்ச்சி அடையவேண்டி பாரதிதாசன் கூறுவன யாவை?
22. தகத்தகாயத் தமிழைத் தாபிப்பதற்கு பாவேந்தர் கூறுவன யாவை?

## உரைநடை

1. செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகள் யாவை?
2. தமிழ் மொழியின் இலக்கியவளம் குறித்து எழுதுக.
3. தமிழ் மொழியின் இலக்கணச் சிறப்பை எழுதுக.
4. செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்குக.
5. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?
6. பெண்ணுரிமையை விளக்குக
7. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?
8. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகள் எனப் பெரியார் கூறுவன யாவை? (நெடுவினா)
9. பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவன் யாவை?

## துணைப்பாடம்

1. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்பற்றினை விளக்குக
2. பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டினை விளக்குக
3. மெல்ல மெல்ல மற என்னும் சிறுகதையின் மையக் கருத்தை மாறாமல் சுருக்கி வரைக.
4. கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதை விளக்குக.

## கடிதம்

1. பழுதடைந்த சாலையை சீர்செய்து தரக்கோரி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
2. நீ படித்த புத்தகம் குறித்து நண்பனுக்கு ஒரு நூல் மதிப்புரை எழுதுக.

## கட்டுரை

1. முன்னுரை - வயல்வெளிகள் கட்டிடங்களாகும் நிலை - வேளாண்மையின் சிறப்பு - உணவுக்கு விவசாயமே கதி - இளைஞர்கள் கையில் எதிர்காலம் - முடிவுரை.
2. முன்னுரை - நாட்டுப்புறம் என்பதன் பொருள் - நாட்டுப் பாடல்கள் - தொட்டில் முதல் சுடுகாடு வரை - கருநாடக இசைக்கு முன்னோடி நாட்டுப்பாடலே - முடிவுரை.

## சுருக்கி வரைதல்

கொடுக்கப்பட்ட பத்தியைச் சுருக்கி மூன்றில் ஒரு பங்காக்கி திருந்திய படிவம், திருந்தாதபடிவம் இவற்றோடு எழுதுக. (திருந்தாத படிவம் கொடுக்கப்பட்ட பத்திபோல பாதியளவு இருக்கவேண்டும். அதை எழுதி மெல்லிய கோடால் அடித்துவிட வேண்டும். பிறகு திருந்திய படிவம் மூன்றில் ஒரு பங்கு வரும்படி அமைத்துத் தெளிவாக்கிச் சொந்த நடையில் எழுதல் வேண்டும்).

## பத்தி

சங்க காலம் தமிழக வரலாற்றில் பொற்காலமாகக் கருதப்படுகிறது. சங்க காலத்தில் புலவர்கள், பாடினிகள், விறலிகள், பாணர்கள் போற்றிப்

புரக்கப்பட்டனர். எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்கள். சங்காலத்தில் பெண்கள் போற்றிப் பாதுகாக்கப்பட்டனர். காதலும் வீரமும் தமிழரது இருகண்களாகத் திகழ்ந்தன, விருந்தோம்பலைச் சிறந்த பண்பாகக் கருதினர். அகம், புறம் என்று வகுத்து செவ்வியல் வாழ்வு வாழ்ந்தனர். பழியெனில் உலகையும் துறக்க முடிவு செய்தனர். புகழெனில் உயிரையும் கொடுக்க முன்வந்தனர். தன்னலம் மறந்து பிறர்நலம் பேணினர். கல்வி கேள்வி, ஈகை, வீரம், பொறை, பிறன்மனை விழையாமை போன்ற அருங்குணங்களை உடையவராய்த் தமிழர் விளங்கினர். பொருளுக்கு இலக்கணம் கண்ட பெருமையுடையவராய்த் திகழ்ந்தனர்.

குற்றம், பொய்மை கடிந்த உயர் வாழ்வு வாழ்ந்தனர். உழவையும் தொழிலையும் இரு கண்களாகப் போற்றினர். இயற்கையை தெய்வமாகக் கொண்டு வணங்கினர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலம் அடிப்படையில் மக்களின் வாழ்க்கை சங்க காலத்தில் அமைந்திருந்து.

**திருக்குறள் நிரப்புக:**

1. ______________ என்ப உளவோ ______________
   காலம் அறிந்து செயின்
2. ஒழுக்கம் _________ கொல்லாவே தீய
   வழுக்கியும் _________ சொலல்
3. ஊக்கம் உடையான் ___________ பொருதகர்
   தாக்கற்குப் பேருந் ____________
4. மறப்பினு மோத்துக் கொளலாகும் ______________
   _____________ குன்றக் கெடும்.

***********************************